குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 7.
இறுதி பருவத் தேர்வு – செப்டம்பர் 2020

நாள்: 17.09.2020

## இணையவழித் தேர்வு வழிகாட்டுதல்கள்

- இறுதியாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகளுக்கான இறுதிப் பருவத் தேர்வுகள் 21.09.2020 முதல் 30.09.2020 வரை நடத்தப்படும்.
- **இணையவழியில் தேர்வுகள் நடைபெறும்.**
- வினாத்தாளில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின் படி தேர்வுக்காலம் 3 மணி நேரம் ஆகும்.
- நாள்தோறும் தேர்வு முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை நடத்தப்பெறும்.
- தேர்வு நடைபெறும் நாட்களில், வினாத்தாள்கள் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகத்தால் துறை தலைவர்களின் Whatsapp-ற்கும், துறை தலைவர்கள் பொறுப்பாசிரியர் வழியாக மாணவிகளின் Whatsapp-ற்கும் **காலை 09.00 மணிக்கு வெளியிடப்படும்.**
- நடப்பு பயன்பாட்டில் உள்ள வகையின் படி வினாத்தாள் மூலம் தேர்வுகள் நடத்தப்பெறும். வினாத்தாள் பதிவிறக்கம் செய்ய (1 மணி நேரம்), தேர்வு எழுத (3 மணி நேரம்) அதனை PDF வகையில் மின்னஞ்சல் (e-mail) (2 மணி நேரம்) வழியாக அனுப்பிட மாணவிகளுக்கு மொத்தமாக ஆறு மணி நேர கால அவகாசம் வழங்கப்படும்.
- வினாத்தாள்களை Adobe Scanner or Document Scanner பயன்படுத்தி Scan செய்து PDF-ஆக மாற்றி பதிவேற்றம் செய்ய வேண்டும்.

  அனுப்ப வேண்டிய File Name.

  **Register Number – Examination Day**

  for example: 1st day U17DH007-1
  2nd day U17DH007-2

- மாற்றுத் திறனாளி மாணவிகள் தங்களுக்கு தேர்வு எழுதத் தகுந்த உதவியாளர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் மற்றும் அவர்களுக்கு 1 மணிநேரம் கூடுதலாக அனுமதிக்கப்படும்.
- தேர்வு எழுதி முடித்த பிறகு மாணவிகள் விடைத்தாள்களை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டடால் தேர்வு கட்டுபாட்டு அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டுமென கேட்கப்படும்.
- **ஒருமுறை பதிவேற்றம் செய்த விடைத்தாளை மாற்றவோ திருத்தவோ இயலாது. ஆகவே, மாணவிகள், தங்களது விடைத்தாளை முழுமையாக சரிபார்த்த பின்னர் பதிவேற்றவம் செய்ய வேண்டும்.**
- வினாத்தாள் பதிவிறக்கத்திற்கு பின் மாணவிகள் சொந்த பயன்பாட்டின் அடிப்படையில் A4 அளவிலான வெள்ளைத் தாள்களின் ஒரு பக்கத்தில் மட்டும் தேர்வினை எழுதவேண்டும்.
- விடைத்தாள்களின் எண்ணிக்கை 20 பக்கத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்.

- விடைத்தாள்களை நீலம் அல்லது கருப்பு நிற மையால் மாணவிகள் எழுத வேண்டும். விடைகளை தட்டச்சு செய்து அனுப்புவது, புத்தகங்களில் இருந்து எடுத்து, Google Image பயன்படுத்துவது, ஒட்டி அனுப்புவது போன்ற செயல்களுக்கு அனுமதியில்லை.
- மாணவி பெயர், பதிவெண், தாளின் பெயர், பாடக்குறியீடு, மற்றும் தேர்வு நாள் ஆகியவற்றை தங்கள் விடைத்தாளின் முதல் பக்கத்தில் எழுத வேண்டும்.

| | |
|---|---|
| Name | : |
| Register Number | : |
| Subject Code | : |
| Title of the Paper | : |
| Date of Exam | : |
| Total No.of Pages Written | : |

- **விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் மாணவிகள் தங்கள் பதிவெண்ணை எழுதவும், விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப் பகுதியில் கையொப்பம் இடவேண்டும்.**
- விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் எழுதப்பட்ட மொத்த தாள்களின் பக்க எண்ணிக்கையினை கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.
- வினாத்தாள் பதிவிறக்கம் மற்றும் விடைத்தாள் பதிவேற்றம் தொடர்பாக ஏதேனும் விளக்கம் பெற தேவைப்பட்டால் மாணவிகள் தங்கள் பொறுப்பாசிரியர்கள் அல்லது துறைத்தலைவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.
- கல்லூரிப் படிப்பை முடித்துச்சென்ற மாணவிகள் ஏற்கனவே பதிவுசெய்து கட்டணம் செலுத்தியிருப்பின் இளநிலை பாடமாக இருந்தால் ஆறாம் பருவமும், முதநிலைப் பாடமாக இருந்தால் நான்காம் பருவத் தாள்களை மட்டும் எழுத அனுமதிக்கப்படுவார்கள்.
- மாணவிகளின் கையெழுத்து முந்தய தேர்வு தாள் கையொழுத்தோடு ஒப்பீடு செய்யப்பட்ட பின்னர் மதிப்பீடு செய்யப்படும்.
- கொரோனா நோய் தொற்று காலத்தில் தேர்வுகள் தொடர்பான எத்தகைய முறைகேடுகளிலும் மாணவிகள் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்னர் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரியப்பட்டால் மாணவிகள் கல்லூரியின் தற்போதைய விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.
- இத்தேர்வு முறையில் மாணவிகள் போதிய பயிற்சி பெற்றிட 18.09.2020 (வெள்ளிக்கிழமை)அன்று மாலை 4.00 மணி முதல் 5.00 மணிக்குள் மாதிரி தேர்வு நடத்தப்படும்.

Gnasuki
18.9.2020
தேர்வு நெறியாளர்
தேர்வு நெறியாளர்,
குந்தவை நாச்சியார் அரசு
மகளிர் கலைக் கல்லூரி(தன்னாட்சி),
தஞ்சாவூர்-613 007.

முதல்வர்
18/9/2020
Principal,
Kunthavai Naacchiyaar
Govt. Arts College (Women)
Thanjavur-613 007.